1974 மார்ச் 4]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கம்யூனிட்டி சர்டிபிகேட் கேட்பது முறையானதுதான். அதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அந்தக் குறிப்பிட்ட நமூனுவில், குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சட்ட மன்ற உறுப்பினர் அத்தாட்சி கொடுத்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கத்தினர் குறிப்பிடுவது போன்ற புகார்கள் எதுவும் எனக்கு வரவில்லை. அப்படி ஏதாவது புகார் இருக்கிறதா என்று விசாரிக்கிறேன்.

திருச்சிராப்பள்ளி அரிசன மாணவ விடுதிகளுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்கள்.

*277.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அரசினர் மாணவ, மாணிவியர் விடுதிகளுக்குத் தேவையான அரிசி, மளிகைச் சாமான்களை திருச்சி சூப்பர் மார்க்கெட்டில்தான் வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித் துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவை முன் ஒரு அறிக்கை + வைக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்பொழுது சூப்பர் மார்க்கெட்டிலே விற்கப்படுகிற பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. வெளியிலே மார்க்கெட்டிலே விலை குறைந்திருக்கிறது. சூப்பர் மார்க்கெட்டிலேதான் வாங்க வேண்டுமென்று சொல்வதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாகக் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து இந்தப் பொருள்கள் வாங்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சிறப்பு அங்காடியில் விலை கூடுத லாக இருந்தாலும் நல்ல பொருள்கள் கிடைக்கின்றன. அவர்கள் ஒரு முறையிலேயே எல்லாப் பொருட்களையும் வண்டியிலே கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகிருர்கள். சில பொருட்களின் விலை அதிகமாக இருக்கலாம். சில பொருட்களின் விலை மலிவாக இருக்கின்றன. மொத் தத்தில் அரசுக்கு இலாபம் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : எல்லா மாவட்டங்களுக்கும் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்ருல் எல்லா மாவட்டங்களுக்கும் அப்படிப்பட்ட உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்லா மாவட்டங்களுக்கும் தான். ஆனுல், கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்கள் இருக்கலாம். அவை இல்லாத இடங்களாக இருந்தால் வேறு இடங்களிலே அவர்கள் வாங்கிக் கொள்ளலாம். கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தால், கூட்டுறவுச் சங்கங்களிலும், சிறப்பு அங்காடிகள் இருந்தால் சிறப்பு அங்காடிகளிலும் வாங்க வேண்டுமென்று உத்திரவு இருக்கிறது.

*96-97-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. செ. சதாசிவம்: அரிசன மாணவர்கள் உணவு விடுதி, பின் தங்கிய மாணவர்கள் உணவு விடுதி இவற்றிற்கு கறிகாய், விறகு முதலியவைகள் ஒப்பந்தம் மூலம் பால் சப்ளை செய்வதற்கு ஜில்லாவிற்கு ஒருவர் போட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அப்படியிருப்பதால், ஜில்லா பூராவும் அவரால் சப்ளை செய்ய முடியவில்லை. அதனால் உணவு விடுதிகளுக்கு, விறகு, காய்கறி, பால், வெளிச் சந்தைகளில் வாங்க முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டு தாலுக்காவுக்கு ஒருவரை நியமனம் செய்து அவர் மூலம் அவற்றை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

முற்பகல் 10·30

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்காத பொருள்களை ஒப்பந்தப் புள்ளி பெற்று வாங்கலாம் என்று விதி இருக்கிறது. ஜில்லா பூராவும் வாங்குகிறார்களா அல்லது தாலுக்கா வாரியாக வாங்குகிறார்களா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

மேலணையில் மீன் வளர்ப்புப் பண்ணை.

*278 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயது கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மேலணையில் மீன் வளர்ப்புப் பண்ணை நிறுவும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அண்மையில் மேலணையில் மீன் வள்ர்ப்புப் பண்ணைகள் நான்கு கட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுப் பணித்துறை மீனளத் துறையிடம் ஒப்படைத்தவுடன் இவை செயல்படத் தொடங்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த மீன் வளர்ப்பிற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அங்கே வளர்க்கப்படும் மீன்களை வேறு பகுதிகளுக்கு அனுப்பும் முயற்சி இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நர்சரி இருக்கிறதா என்பது கேள்வி. கட்டப்பட்டிருப்பதாகப் பதில் சொன்னேன். தொகை விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நர்சரி கட்டப்பட்டிருக்கிறது, விரைவில் மேற்கொண்டு வேலைகள் துவங்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், விரைவில் என்றால் எத்தனை மாதங்களில் என்று தெரிவிப்பார்களா ? மேட்டூரில் இருப்பதைப் போல் இங்கேயும் 'கட்லா ஃபிஷ்' வளர்க்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏறத்தாழ கட்டி முடிக்கும் தறுவாயில் இருக்கிறது. பொதுப் பணித் துறையிலிருந்து மீனளத் துறைக்கு இன்னும் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டவுடன் விரைவில்